சீர்படுத்தி அதனுடைய பழமை கெடாமல் தொல்பொருள் ஆய்வுத்துறையின் மூலம் பாதுகாத்திட அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மனோரா என்ற அந்த சரித்திரப் புகழ் மிக்க சின்னம் இப்போது தொல்பொருள் ஆய்வுத் துறையின் பொறுப்பிலே இருக்கின்றது. அதைச் சீர்படுத்திப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத் துறை தொல்பொருள் ஆய்வுத் துறைக்கு அறிவுறுத்தும்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, மனோராவை தொல்பொருள் ஆய்வுத் துறை பழுது பார்க்கட்டும்; அதைப் பாதுகாக்கட்டும். ஆனால் அதே நேரத்தில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு போக்குவரத்து வசதி, தங்கும் வசதி, உணவு விடுதி, ஓய்வு எடுப்பதற்கு பூங்கா, நீச்சல் குளம் ஆகிய வசதிகளை சுற்றுலாத் துறையின் மூலம் உடனடியாகச் செய்து தர இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, மனோரா என்கிற அந்த இடத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற சிறப்பே 1814 ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தின் வெற்றியைக் குறிக்கின்ற வகையில் சரபோஜி மன்னரால் எழுப்பப்பட்ட கட்டிடமும் மனோரா என்ற அந்த நினைவுச் சின்னமும்தான். இதுதான் அதற்கு அடிப்படைக் காரணமுமாகும். அதைவிட மிகச் சிறப்பு என்னவென்றால் அது மிகச் சிறந்த கடற்கரைப் பகுதியாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அங்கே கடலில் அலைகள் அதிகமாக அடிப்பது கிடையாது. மேலும் அங்கே சுறா மீன்கள் போன்றவை கிடையாது. குறிப்பாக திருச்சி, தஞ்சை போன்ற மாவட்டங்களுக்கு அருகிலே இருக்கின்ற மிகச் சிறந்த மணற்பரப்பான கடற்கரைப் பகுதியாக அது விளங்கிக் கொண்டிருக்கின்றது. ஆகவே அதனை ஒரு சிறந்த சுற்றுலாத் தலமாக மாற்ற முடியும் என்று சுற்றுலா அதிகாரிகள் அரசுக்கு சில திட்டங்களைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். முதலிலே அந்த மனோரா என்று அழைக்கப்படுகின்ற நினைவுச் சின்னம் பாதுகாக்கப்பட்டால் அதைத் தொடர்ந்து சுற்றுலாத் துறை அந்த முயற்சியை மேற்கொள்ள இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரெவின்யூ கண்மாய்களுக்கான மீன்பாசி பாத்யதை.

*வினா எண் 816— திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி சரகத்தில் உள்ள ரெவின்யூ கண்மாய் களில் மீன்பாசி பாத்யதை சம்பந்தப்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகளுக்கு கிடைக்க வகை செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளிலே ரெவின்யூ கண்மாய்களில் மீன்பாசி ஏலத்தை இப் போது ஊராட்சி ஒன்றியங்கள் நடத்திக்கொண்டிருக்கின்றன. ஆனால் பேரூராட்சிகளால் மக்களுடைய தேவைகளை எல் லாம் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை இருப்பதால் மீண்டும் இதுபற்றிப் பரிசீலனை செய்து பேரூராட்சிகளுக்கே அந்தந்தப் பகுதி ரெவின்யூ கண்மாய்களின் மீன்பாசி ஏலத்தைக் கொடுப் பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் ரெவின்யூ கண் மாய்களின் மீன்பாசி பாத்யதை பேரூராட்சிகளுக்குக் கொடுக் கின்ற விதிமுறைகள் இல்லை. ஆகவே இவைகள் பரிசீலிக்கப் படும்.

திரு. சா. கிருஷ்ணமூர்த்தி : தலைவரவர்களே, முன் பெல்லாம் ரெவின்யூ கண்மாய்கள் எல்லாம் அந்தந்த கிராமத்தைச் சேர்ந்தவர்களுக்கு மீன்பாசி பட்டா என்று கொடுக்கப்பட்டு வந்தது. அந்த முறையில் பாரம்பரியமாக அந்தந்த கிராமத் தைச் சேர்ந்தவர்கள் கண்மாய்களில் மீன்பாசி உரிமையைக் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே அந்தக் கண்மாய்களைப் பராமரிக்கும் பொறுப்பை அந்தந்த கிராமவாசிகளே பரம்பரை யாகச் செய்து வருகிறார்கள். ஆகவே ஊராட்சி ஒன்றியங் களுக்கு மீன் பிடிக்கும் உரிமையை வழங்க அரசு முன்வருமா ? அப்படிச் செய்தால் ஒரு கிராமத்திலே இருப்பவர்கள் அடுத்த கிராமத்திலே இருப்பவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு மீன்பிடிக்கின்ற வகையில் தகராறுகள் ஏற்படாமல் தடுக்க முடியும். ஆகவே அந்த உரிமையை ஊராட்சி ஒன்றியங் களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

சட்டப் பேரவை LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கொடுக்கின்ற திட்டம் ஏற்கனவே இருக்கின்றது. பேரூராட்சிகளுக்கு கொடுப்பது பற்றிய கேள்வி தான் இது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, ரெவின்யூ கண்மாய்களில் மீன் வளர்த்து அதைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இப்போது அந்தந்த கிராம விவசாய மக்களிடத்திலே இருக்கின்றது. ஆனால் அங்கு ஏலம் விடுகின்ற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே அந்த நிலைமையை மாற்றி அந்தந்த ஊர் கிராம மக்களுக்கே, குறிப்பாக, விவசாய மக்களுக்கே கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் பரிசீலிக்கப்படவேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மீன்பாசி குத்தகைக்கு இவ்வளவு காசு அரசாங்கத்திற்கு கட்டவேண்டும் என்று ஏதாவது விதி இருக்கிறதா ? அது மாத்திரம் அல்லாமல், இதைதனி நபர்கள் ஏக்கருக்கு 37 பைசா வீதம் கொடுத்துவிட்டு மொத்தத்தில் 6,000, 7,000 என்று ஏலத்தில் விட்டு அவர்கள் அதை முழுவதுமாக அனுபவித்துக் கொண்டு வருகிறார்களே, அது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்ற அரசே இந்த மீன்பாசிகளை ஏற்று நடத்தும் வகையில் வழி வகை காண முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் பொதுப்பணித்துறையால் எடுக்கப்பட்ட குளங்கள் இருக்கின்றன. அதேபோல ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சிகளிலும் குளங்கள் இருக்கின்றன. வாய்க்கால்களும், கண்மாய்களும் கூட இருக்கின்றன. இவைகளிலிருந்து கொடுக்கப்படுகிற குத்தகைகள் எல்லாம் 1958 ஆம் ஆண்டு ஊராட்சி மன்ற விதிகளின் அடிப்படையில்தான் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்ற ஒழுங்கீனங்கள் நடைபெறுகின்றன என்ற நிலை ம இருந்தால், அவைகள் எல்லாம் கண்காணிக்கப்பட்டு, பரிசீலிக்கப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளில் சிறிய ஏரிகளிலே உள்ள மச்சமகசூலை தனி நபர்களுக்குப் பட்டா செய்து கொடுத்து, பல ஆண்டுகளாக அவைகள் அவர்கள் வசம் இருக்கின்றன. அவர்கள்

அதை ஏலத்தில் விட்டு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் லாபம் பெறுகிறார்கள். அந்த நிலையை மாற்றி, நகராட்சியிலேயே அதைப் பயன்படுத்தும் வகையில் மாற்றுவதற்கு, அரசு ஆவன செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, பல்வேறு இடங்களில் சங்கங்கள் என்கிற பெயரால் குத்தகை எடுத்து அதன் மூலமாக வருமானத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, சில தனி நபர்கள் மீனவர்கள் சொசைட்டி என்று பெயர்களில் ரிஜிஸ்தர் பண்ணிக் கொண்டு, இந்த மீன்பாசி குத்தகையை ஏலத்தில் எடுத்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் சம்பாதித்துக்கொண்டு, அரசை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மீண்டும் அவர்களுக்குக் குத்தகையைக் கொடுக்காமல் இருக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, போலி சங்கங்கள் வைத்துக் கொண்டு, இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்ற புகார்கள் ஏற்கெனவே அரசினுடைய கவனத்தில் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்படும்.

திண்டுக்கல் நகரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம்.

* வினா எண். 817—திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் புதிய பஸ் ஸ்டாண்டு அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) தற்போது உள்ள பஸ் ஸ்டாண்டை காய்கறி மார்க்கெட்டாக மாற்றும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இந்த வேலையில் முதல் கட்டம் முடியும் நிலையில் உள்ளது.

(ஆ) இல்லை.